THE HON. THIRU S. MADHAVAN : Sir, that is why I mentioned that the correspondence ended with acceptance or assent We leave it at that. Supposing they press us with any then we bring the Bill here and amend it in accordance with the suggestion, then we bring the Bill here and amend it in accordance with the suggestions.

THIRU A. R. DAMODARAN : Sir, supposing it is rejected, will it be placed before the Legislature?

THE HON. THIRU S. MADHAVAN : Certainly, Sir.

Additional Public Prosecutor

*315 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the post of Additional Public Prosecutor in the Additional Sessions Court at Tiruchirappalli is lying vacant from June 1973 ; and

(b) if so, the reasons therefor?

கூடுதல் வழக்கு நடத்துநர் பதவி

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியில் உள்ள கூடுதல் செஷன்ஸ் நீதி மன்றத்தில் கூடுதல் வழக்கு நடத்துநர் (Additional Public Prosecutor) பதவி 1973 ஜூன் திங்களிலிருந்து காலியாக உள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை திருச்சிராப்பள்ளி அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டில் பப்ளிக் பிராசிக்கூட்டர் பதவியில் இருந்த ஒருவர் அந்தப் பதவியிலிருந்து விலகியதன் காரணமாக, அது காலியாகவே இருந்து வருகிறது. ஆறு மாதங்களுக்கு மேலாகியும் அது பூர்த்தி செய்யப்படாமலேயே இருந்து வருகிறது. இனியாவது பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 எப்ரல் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அடிஷனல் பப்ளிக் பிராசிகூட்டர் என்று ஒருவர் இல்லையே தவிர அந்த வேலை நடைபெருமலில்லை. காரணம், பப்ளிக் பிராசிகூட்டர் அந்த வேலையைச் சேர்த்துப் பார்க்க வேண்டு மென்று ஒரு நிரந்தர உத்தரவு இருக்கிறது. 18—2—1974-ல் ஒரு புதிய நபர் அந்தப் பதவியில் சேர்ந்திருக்கிருர்.

Collapse of Harijan Colony as a result of Heavy Rain

*316 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that about 20 houses collapsed in the Harijan Colony at Tirupathi Saram, Thovalai taluk, Kanyakumari district, on account of stagnation of rain water as a result of the heavy rains during 1970;

(b) whether any representation has been received, requesting assistance for the reconstruction of those houses; and

(c) if so, the action taken thereon?

பெரு மழையினுல் பாதிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்பு

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகா, திருப்பதி சாரத்தில் உள்ள அரிசனக் குடியிருப்பில் 1970-ம் ஆண்டு பெய்த பெருமழை யினுல், தண்ணீர் பெருக்கெடுத்து தேங்கி நின்றதால் சுமார் 20 வீடுகள் விழ்ந்தன என்பது உண்மையா?

(இ) அந்த வீடுகளை திருப்பிக் கட்டுவதற்கு உதவி கேட்டு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 27 வீடுகள் பாதிக்கப் பட்டன.

(இ) ஆம்.

(உ) பாதிக்கப்பட்ட 27 நபருக்கும் தலா ரூபாய் 30 உதவித் தொகையும், ரூபாய் 10 துணிகள் வாங்குவதற்கும் மொத்தத்தில் ரூபாய் 1,080 நிவாரணம் வழங்கப்பட்டது. வீடுகளைத் திருப்பிக் கட்டுவதற்கு கடன் வழங்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS